குன்றத்தூர் நகராட்சி

நாள்.05.06.2026

**கூட்டம் எண்.1/2026**

## சிறப்புக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் ஜூன்-2026ம் மாதத்திற்கான சிறப்புக்கூட்டம் 05.06.2026ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/SBM2 நாள்.03.06.2026-ல் இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் மூலம், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026, 01.04.2026 முதல் அமலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த விதிகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக, 05.06.2026 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு கழிவுகளை தரம் பிரித்தல் மற்றும் 2026 திடக்கழிவு மேலாண்மை விதிகளைச் செயல்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, 2026 ஜூன் 5 முதல் 2026 ஜூன் 12 வரை உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, குன்றத்தூர் நகராட்சியில் 2026 உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் (ULBs) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை (SWM) விதிகள், 2026 மற்றும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்கள், குப்பைகள் தரம்பிரித்தல், வார்டு அளவிலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் SBM(U) 2.0-இன் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**(ந.க.எண்.529/2026/எச்1)**

### தீர்மானம் எண்.1056 நாள்.05.06.2026

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**